## புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை – 2016

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 அதிகாரசபையைத் தாபித்தலும் அதன் செயற்பாடு நிலையும்

2006 செப்தெம்பர் 01 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் II ஆவது பிரிவின் மேலதிகமாக பிரசுரிக்கப்பட்ட 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் மூலம் 2008 ஆம் ஆண்டின் போது இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டிருந்ததுடன் அன்றிலிருந்து 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சகல கொடுக்கல் வாங்கல்களும் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தலைப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக அதிகார சபைக்கான முதலாவது தடவையாக நிதிக்கூற்றுத் தொகுதி தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில்

கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கட்டிட பொருத்திகளில் 4 சதவீதம் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்தல் கணக்கீட்டுக் கொள்கையாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 2 சதவீதம் மாத்திரம் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டமையினால் வருடாந்த பெறுமானத் தேய்வுச் செலவினம் ரூபா 34,013 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2015 யூலை 14 ஆந் திகதிய நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 03/2015 | 19 சந்தர்ப்பங்களின் போது ரூபா 855,248 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி மிகை மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டமையினால் அதில் 25 சதவீதத்திற்கும் 79 சதவீதத்திற்கும் இடையேயான சதவீதமொன்று அதாவது ரூபா 400,869 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய பணி நிறைவு பெற்று 10 நாட்களுக்குள் செயல்நிமித்த உபகட்டு நிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 18 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 674,187 கூட்டுத்தொகையான கட்டுநிதி 12 நாட்கள் முதல் 61 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் பட்டியல் மூலம் தீர்க்கப்பட்டிருந்ததுடன் 26 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த கட்டுநிதிகளில் சேமிக்கப்பட்ட பணம் ரூபா 424,035 தொகை 02 நாட்கள் முதல் 27 நாட்கள் வரையிலான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 2002 செப்தெம்பர் 30 ஆந் திகதிய 364(3) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தி | வழங்குனர்களுக்கு 18 சந்தர்ப்பங்களின் போது செலுத்தப்பட்ட ரூபா 1,514,932 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 5,625,716 பற்றாக்குறையாக இருந்தது. எனினும் நிதி விளைவுகளில் ஊழியர் ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கியதன் பின்னர் அதிகாரசபையின் பங்களிப்பு ரூபா 2,163,005 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்தது.

- புகையிலை உற்பத்தி மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய கொள்கைகளை அமுல்படுத்துவதற்கும், கொள்கைகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்கும் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல், கொள்கைகளை அமுல்படுத்துவதற்காகத் தேவையான சட்டரீதியான, வருமானவரி, நிர்வாக மற்றும் ஏனைய தேவையான வழிமுறைகளை பரிந்துரை செய்தல் மற்றும் கொள்கை அமுலாக்கல் தொடர்பான ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்தல், பிரச்சினை தொடர்பாக ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் மற்றும் அதற்கு உதவுதல்.

- வெகுசன ஊடகங்களின் அனுசரணையுடனும், சமூக அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டம் மூலமும் சுகாதார மேம்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் உதவுதல், தேசிய கொள்கைகளை அமுல்படுத்துதல் மற்றும் ஆய்வு செய்தல் தொடர்பான செயற்பாடுகள் மூலம் சமூகப் பங்களிப்பை ஊக்குவித்தல், பொதுமக்களின் தகவல்களைக் கையேற்றல் மற்றும் உரிய நிறுவனங்களுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பரிந்துரை செய்தல்.

- புகையிலை உற்பத்தி மற்றும் மதுசார உற்பத்தி பயன்பாடுகளினால் எழுகின்ற இழப்புக்களைக் குறைப்பதற்கான தந்திரோபாய வழிகளை சிபாரிசு செய்தல் மற்றும் அதற்காக அரச மற்றும் அரச சார்பற்ற முகவர் நிறுவனங்களை இணைத்து முகவர் நிறுவனமாக செயற்படல்.

- முறையற்ற மருந்துப் பாவனையைத் தடுத்தல் அல்லது குறைப்பதற்காக தேசிய அபாயகர ஔடத கட்டுப்பாட்டுச் சபையிடம் விசாரித்து வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

- புகையிலை உற்பத்தி மற்றும் மதுசாரம் உற்பத்தி, தயாரித்தல், பயன்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல்கள் உரிய பொருளாதார சுகாதார மற்றும் ஏனைய பிரச்சினைகளை மதிப்பாய்வு செய்தல், நுகர்வு தொடர்பான ஆராய்ச்சிகளை நடாத்துதல், மேம்படுத்துதல் மற்றும் தொடர்புபடுத்துதல்.

- புகையிலை உற்பத்தி மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய கொள்கையினை அமுல்படுத்துதல் தொடர்பில் தேவையான அரச சார்பற்ற மற்றும் தனியார் துறைகளின் சகல அமைப்புக்களினதும் பங்குபற்றலைப் பெற்றுக் கொள்ளல்.

- புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சகல புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் மற்றும் மதுசாரம் மற்றும் புகையிலை தொடர்பான பிரச்சினைகள் தொடர்பில் உள்நாட்டு, வலய மற்றும் சர்வதேச அமைப்புக்களினது பங்களிப்பைக் கட்டியெழுப்புதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களுக்கிடையே வெகுசன ஊடக அனுசரணையுடனும் சமூக அடிப்படை நிகழ்ச்சித்திட்டத்தின் மூலமும் சுகாதாரத்தை மேம்படுத்துதலை ஊக்குவித்தலும் உதவுதலும், புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் தேவையான அரச சார்பற்ற மற்றும் தனியார் துறையின் அமைப்புக்களின் பங்குபற்றலைப் பெற்றுக்கொள்ளல் நோக்கங்களைத் தவிர்க்கும் போது ஏனைய நோக்கங்களை நிறைவேற்றுவது தொடர்பில் அதிகாரசபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் நிறைவேற்ற வேண்டிய 24 நோக்கங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 40 மில்லியன் மூலதன நிதிஏற்பாடு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரியதாகத் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையினால் 11 நோக்கங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் ரூபா 5.7 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 4 உப செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6.75 மில்லியன் நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 1.62 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**4.2 பதவியணியினர் முகாமைத்துவம்**

அதிகாரசபையினால் தமது பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 30 பதவிகளுடன் பதவியணியினரின் தேவை இனங்காணப்பட்டிருந்த போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 08 பதவிகளுக்காக மாத்திரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் உள்ளபடியான பதவியணியினர் 07 பேர்களை உள்ளடக்கியிருந்ததுடன் போதியளவான பதவியணியினரொன்று காணப்படாமையின் அடிப்படையில் அதிகாரசபைக்குரிய நோக்கங்களை உரிய பிரகாரம் நிறைவேற்றுவதற்கு தடையாக இருந்தது.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அதிகாசபையின் நிர்வாக அலுவலகத்திற்காக நகர முதலீடு மற்றும் அபிவிருத்திக் கம்பனிக்குச் சொந்தமான கட்டிடமொன்றின் பதினோராவது மாடியில் 2,949 சதுர அடி 2013 பெப்ரவரி முதல் 2016 திசெம்பர் வரை வாடகைக்குப் பெறப்பட்டு கூட்டுமொத்தமாக ரூபா 29,193,041 வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் 2013 பெப்ரவரி முதல் அதிகாரசபையின் ஒட்டு மொத்த பதவியணியினர் 03 பேராகவும், 2013 நவம்பர் முதல் 07 பேராகவும் வரையறுக்கப்பட்டமையின் காரணமாக தேவையினை விஞ்சி கட்டிடமொன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்**

அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்கும் வகையில் செயல்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாதிருந்தமையினால் அதிகாரசபையின் செயல்முன்னேற்றம் தொடர்பாக சரியான மீளாய்வொன்றைச் செய்ய முடியாதிருந்தது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.